

சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜனவரி 19 முதல் 31, 2024 வரை தமிழ்நாட்டின் நான்கு மாவட்டங்களில் நடத்தப்படும் “கேலோ இண்டியா” இளைஞர் விளையாட்டு 2023க்கான ஆயத்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி. விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டின் நிலை மற்றும் இதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பிற ஏற்பாடுகளை மதிப்பாய்வு செய்தார். உடன் விளையாட்டுத்துறை உயர் அதிகாரிகள் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சிப்காட் இன்டஸ்டிரியல் இன்னோவிஷன் சென்டரில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 முன்னிட்டு, மாவட்ட அளவிலான தொழில் முதலீட்டாளர்கள் கருத்தரங்கு, தொழில் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சியில், 32 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ரூ.942.68 கோடி முதலீட்டில் புதிய தொழில் துவங்க மற்றும் விரிவாக்கம் செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ.செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ் (ஓசூர்), தே.மதியழகன் (பர்கூர்), ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் முன்னிலையில் 26.12.2023 அன்று மேற்கொண்டனர். உடன், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.டி.சினேகா, மாவட்ட வன அலுவலர் செல்வி.கார்த்திகேயாயிணி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ச.பிரசன்ன பாலமுருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### பதிவாளர்கள் – அதிகாரிகள் பங்கேற்பு!

# உயர் கல்வித் துறையின் ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 29 -

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் உயர்கல்வித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின் உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், உயர்கல்வித்துறையின் கீழ் இயங்கும் பிற அலுவலகங்களின் அதிகாரிகளின் கலந்தாய்வுக் கூட்டத்தை நேற்று முன்தினம் (27.12.2023) தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற கூட்ட அரங்கில் நடத்தி உயர்கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் அ.இராமசாமி வரவேற்புரையாற்றினார்.



இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னிலை வகித்த உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக் துறைவாரியான செயல்பாடுகள் குறித்து விரிவாக அமைச்சருக்கு எடுத்துரைத்தார். பின்னர் பல்கலைக்கழகப் பதிவாளர்கள் தங்களது பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் குறித்து விவரித்து, தங்களது கோரிக்கைகளைத் தெரிவித்தனர்.

உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தனது தலைமையுரையில், மாணவர்களின் நலனை மேம்படுத்த அரசு கொண்டு வந்துள்ள சிறப்புத் திட்டங்களான முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகைத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், பொறியியல் கல்லூரிகளில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு மற்றும் கட்டணச் சலுகைத் திட்டம், முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவித் திட்டம் போன்ற திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திடுமாறு அறிவுறுத்தினார். மேலும், பெண்களின் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும், உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தைத் திறம்படுத்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் உலகத் தரத்திற்கு மேம்பட வேண்டுமென்றும், பலவகைத் தொழில்நுட்பக் கல்வி உட்பட அனைத்து பாடப் பிரிவுகளிலும் மாணவர் சேர்க்கையினை அதிக்கப்படுத்த வேண்டும் என்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் ஆலோசனை வழங்கினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் கொ.வீரராகவ ராவ், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி நிறுவன ஆணையர், முனைவர். ஆர்.நந்த கோபால், முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர், அறிவியல் நகரம், தேவ்ராஜ் தேவ், உயர்கல்வித் துறை துணைச் செயலாளர், க.தர்ப்பகராஜ், கல்லூரிக் கல்வி இயக்குநர், பல்கலைக் கழக பதிவாளர்கள் மற்றும் உயர்கல்வித்துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### எண்ணூர் வாயு கசிவு சம்பவம் எதிரொலி: அனைத்து தொழிற்சாலைகளிலும்

# வல்லுனர் குழு அமைத்து பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு!

## சுற்றுச் சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டி!

புதுக்கோட்டை, டிச. 29 -

சென்னை எண்ணூர் அருகே பெரிய குப்பம் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் வாயு கசிவு ஏற்பட்டது குறித்து சுற்று சூழல் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கூறியதாவது: -

அமோனியா கசிவு ஏற்பட்ட நிலையில் 15 நிமிடத்தில் ஆலை நிர்வாகம் அதனை சரி செய்துள்ளது.

இந்த வாயு கசிவால் 18 பேர் பாதிக்கப்பட்டு சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உடனடியாக அப்பகுதிக்கு மாசு கட்டுப்பாட்டு அதிகாரிகள் சென்று, பரிசோதனை நடத்தினர். அப்போது அப்பகுதியில் பூஜ்யம் சதவீதம் அமோனியா இல்லை என்று கண்டறியப்பட்டது.



எனவே விபத்து ஏற்பட்ட போதிலும் அது உடனடியாக சரி செய்யப் பட்டது. அந்த தனியார் தொழிற்சாலை ரெட் கேட்டகிரியில் உள்ளது. இதேபோல ரெட் கேட்டகிரியில் இருக்கும் அனைத்து தொழிற்சாலைகளும், மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

அனைத்து பாதுகாப்பு அம்சங்களும் சரியாக உள்ளதா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படும். அதே சமயம் இதுபோன்ற விபத்துகள் ஏற்படும் போது, அதனை தடுக்க நவீன தொழில்நுட்ப அம்சங்கள் உடனடியாக பயன்படுத்தும் நிலையில் உள்ளதா என்பது குறித்து ஒரு குழு அமைத்து வல்லுனர்கள் உதவியுடன் ஆய்வு நடத்தப்பட உள்ளது.

இரவில் இருந்து மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் அங்கு உள்ளனர்.

மேலும் அந்த தனியார் கம்பெனி தற்காலிகமாக மூடப்பட்டு உள்ளது. சல்ப்யூரிக் ஆசிட் பிளாண்ட் மட்டும் உடனடியாக மூட முடியாது என்பதால் படிப்படியாக மூடும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. எதிர் காலத்தில் இது போன்று விபத்துகள் நடைபெறாமல் இருக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை விரைவில் அறிவிப்போம். அங்கு மட்டும் அல்லாமல், நிரந்தர தீர்வை எட்டும் வகையில் இந்த ஆய்வு தமிழ்நாடு முழுவதும் நடைபெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திண்டிவனத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு!

திண்டிவனம், டிச. 29 -

திண்டிவனத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பார்வையிட்டு பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற மனுக்கள் மீது அனைத்துத் துறை அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சி, நகராட்சிகளில் மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் முகாம் நடைபெற்று வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சியில் 3ஆம் கட்டமாக 10,11, 20,21,22 ஆகிய வார்டுகள் சார்பில் மக்களுடன் முதல்வர் சிறப்பு குறை தீர்க்கும் முகாம் திண்டிவனத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமையில் நகராட்சி ஆணையர் தமிழ்ச்செல்வி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் மக்கள் குறைதீர்க்கும் முகாமினை தொடங்கி வைத்தார்.

இதை தொடர்ந்து முகாமில் எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை, வருவாய், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, காவல் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை,வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி துறை, சமூக நலன் உள்ளிட்ட துறையிலிருந்து அரசு அதிகாரிகள் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது கணினி மூலம் பதிவு செய்தனர்.

